**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 213 /2023 PW1**

24.06.2025 **வா.சா.1 ராமன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

அபிஷேக்கை எனக்கு 2021ம் ஆண்டில் இருந்து பழக்கம். எனக்கும் அவருக்கும் அறிமுகம் ஆன காலத்தில் நான் மளிகை பொருட்கள், உலர் பழங்கள், மசாலா பொருட்கள் ஆகியவற்றை பாதுகாக்கும் குளிர் பதன கிடங்கை வைத்து தொழில் செய்து வந்தேன், அபிஷேக் என்ன தொழில் செய்து வந்தார் என எனக்கு குறிப்பிட்டு தெரியாது. அபிஷேக் நிதி நிறுவனம் நடத்தி பைனான்ஸ் செய்து வந்தார் என்றும், அது குறித்து எனக்கு நன்றாக தெரியும் என்றும், தற்போது எனக்கு தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு கடன் பெறுவதற்கு முன்பாக எத்தனை முறை கடன் வாங்கினேன் என்று கேட்டால் கடன் ஏதும் வாங்கவில்லை. என்ன பயன்பாட்டிற்காக இந்த வழக்கு கடனை நான் வாங்கினேனோ, அதற்காக வாங்கிய கடனை நான் பயன்படுத்தினேனா என்றால் நான் எந்த ஒரு குறிப்பிட்ட பயன்பாட்டிற்காகவும் அபிஷேக்கிடம் கடன் வாங்கவில்லை, பொதுவான தேவைக்காக பணம் வாங்கினேன். அபிஷேக்கிடம் நான் சில ஆவணங்களை கொடுத்துள்ளேன் என்றால் இந்த வழக்கு அடமான சொத்து சம்மந்தமான சில ஆவணங்களை கொடுத்துள்ளேன். மேற்படி வழக்கு சொத்து ஆவணத்தை வைத்து வேறு நபர்களிடம் கடன் வாங்கினேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து ஆவணத்தை பொருத்து வேறு பெயர் மாற்றம் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு அடமானச் சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை வைத்து நான் வேறு ஒரு நபரிடம் கடன் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட ஆவணத்தை வைத்து நான் வேறு ஒரு நபரிடம் கடன் வாங்கினேன் என்றும், அது சம்மந்தமாக சிபிசிஐடி விசாரணை தேவை என எனக்கு கடன் கொடுத்தவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.